BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)



Bergen Tamilsk Avis - no.41 - January 2025 - தேன் தமிழிதழ் - மாத இதழ்- இல.41 தை-2025

© Geetha Rasalingam

## வணக்கம்!

2024ம் ஆண்டுக்கு விடை கொடுத்துவிட்டு, 2025ம் ஆண்டை வரவேற்று நடைபோட ஆரம்பித்து விட்டோம். கடந்த ஆண்டில் இனிமையான, கசப்பான அனுபவங்கள் பலவற்றையும் நாம் சந்தித்திருக்கிறோம். பல சவால்களை எதிர்கொண்டிருக்கிறோம். அவற்றை வெற்றிகரமாக கடந்தும் வந்திருக்கிறோம்.

நத்தார் விழா, புத்தாண்டு விழா, பொங்கல் விழா போன்ற மூன்று பெரும் விழாக்களை மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் இனிமையாகக் கொண்டாடிக் களித்துள்ளோம். கண்கவர் வண்ண மின் விளக்குகள், வீடுகள், வீதிகள் எங்கும் ஜொலித்தன. அது மட்டுமல்லாது வெடிகளும், வாண வேடிக்கைகளும் கருமுகிலோடு கலந்ததனையும் காண முடிந்தது. உலகவாழ் மக்கள் அனைவரும் ஆர்ப்பரிப்போடு யூபிலி ஆண்டினை உலகம் பூராகவும் மகிழ்வோடு வரவேற்றனர்.

நாட்கள் வேகமாக உருண்டோட தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாள் உலகவாழ் தமிழ் மக்களால் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இது ஒரு நன்றித் திருவிழா. இத்திருவிழா எப்போது? யாரால் நிறுவப்பட்டது? என்பதற்கான வரலாற்று ஆவணங்கள் எங்கும் இல்லை. உயிரினங்கள் அனைத்துக்கும் உணவளிக்கும் உழவர்கள் தமது உழவுத் தொழிலுக்கு உதவிய இயற்கைக்கும், உயிரினங்களுக்கும் நன்றி கூறும் உன்னத திருவிழா. இத்தனை உன்னத திருவிழா தமிழர்களது பண்பாட்டையும் மாண்பையும் தூக்கி நிறுத்துவதாகும். இத்தகைய பண்பு நிறை கால நினைவுகூரல்கள் என்பவை சீர்கெட்டுப்போகாமல் பாதுகாப்பது உலக வாழ் தமிழர்கள் அனைவரினதும் பொறுப்பாகும்.

அதேவேளை, எமது புலம்பெயர் சமூகத்தின் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும், நல்லுறவுகளையும் மேம்படுத்த வேண்டிய கடப்பாடானது இங்குள்ள பொது அமைப்புகள், மத அமைப்புகள் போன்றவற்றின் மிகப்பெரும் சமூகக் கடமைகளாகும். ஆனால், இவற்றுக்கெல்லாம் நேரெதிர் மாறான செயற்பாடுகளையே பல பொது அமைப்புக்கள் கடந்தசில காலமாக மேற்கொண்டு வருகின்றன என்பதை நாம் கசப்பான மனவுணேர்வோடு ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

ஆமாம், தமிழர்களது பொது அமைப்புக்களாலும், அரசியல் குழுக்களாலும், ஆன்மிகப் பணியகங்களாலும் தாய்மண் உட்பட அனைத்து நாடுகளிலும் தமிழர்கள் பிளவுபட்டுவது அதிகமாகி வருகிறது. அமைப்புக்களுள் ஏற்படும் கருத்து முரண்பாடுகளை சமூக வலைத்தளங்களில் பதிவு செய்வது மட்டுமல்லாது தாம் சார்ந்த ஊடகங்களில் தூற்றுவதும் சாதாரண நிகழ்வுகளாகி விட்டன. இவை கட்டுப்பாட்டுக்குள் கொணரப்படா விடில் எதிர்காலத்தில் தமிழினம் சீர்குலைந்து போவது திண்ணம்.

இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞானத்தின் அரிய கொடைகளான முகநூல், வாட்ஸப் போன்ற சமூக ஊடகங்களை எவரும் கையாளலாம் கருத்துக்களை உலகப்பொதுவெளிகளில் நொடிப்பொழுதில் வெளிப்படுத்தலாம் என்ற நிலையை நாம் அடைந்துள்ளோம். எல்லோருக்குமே கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது. அந்தக் கருத்துச் சுதந்திரத்தின் பெயரால் உண்மைக்குப் புறம்பான செய்திகளையும், தகவல்களையும், சம்பவங்களையும் அளவுக்கதிகமாகவே மனித சமூகம் சந்தித்து வருகின்றது. இந்த அவலம் நமது தமிழ்ச் சமூகத்துக்குள்ளும் அதிகமாகவே நிகழ்த்தப் படுகின்றது. இத்தகைய செயற்பாடுகள் எக்காலத்திலும் ஒரு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கித் தரப் போவதில்லை. மாறாக எமது வருங்காலத் தலைமுறைகளையும் நாம் பொய்களால் சிறைப்படுத்தப்பட்ட ஒரு சமூகமாகவே உருவாக்கி விடுவதாக அமைந்துவிடும்.

பிறந்துள்ள 2025ம் ஆண்டில் நமது பண்பாட்டை ஓரளவேனும் பாதுகாத்துக் கொள்ளும் மனிதர்களாக வாழ்ந்திடுவோம்.

நேசத்துக்குரிய உறவுகள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள்.

தேன் தமிழிதழ்
Ansvarlig redaktør: Julius Antoni
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி
தொலைபேசி எண்: (47) 924 63 674
BTA BERGEN TAMILSK AVIS

# பேர்கன் மாநகர பகுதிவாழ் இளையோருக்கான முக்கிய தகவல்



*16 முதல் 23 வயதுக்குட்பட்ட ஏராளமான இளையோர் பலர் இன்று உளவியல் தாக்கத்துக்கு உள்ளாகி வருகிறார்கள் என்பது அண்மையில் புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.*
*பேர்கன் நகரசபை இதனை கருத்தில் கொண்டு அவ்வாறு பாதிக்கப்படுவோரை விரைவாகவே கவனித்து பராமரிப்பதற்கான வழிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.*

*நீண்ட காலமாக* Bergenhus, Årstad, Arna og Åsane *மாவட்டங்களில் வசிப்பவர்களுக்கு விரைவான உளநலப் பராமரிப்பு ஏற்கனவே நடை முறையில் உள்ளது. இருந்தாலும் தற்போது பாதிக்கப்பட்டவர்கள் வெறெந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் அவர்களுக்கான விரைவான உளநலப் பராமரிப்பு வழங்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*இளையோரின் ஆரோக்கியமான வாழ்வுக்கு விரைவான, சிறந்த பராமரிப்பு மிகவும் முக்கியமாகுமென்பதில் உளநல ஆரோக்கிய திணைக்களம் உறுதியாகவுள்ளது.*

*ஏராளமான இளையோர் தமது அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிறு சிறு சவால்களைக் கூட சமாளிக்க முடியாது கடினப்படுகின்றனர். பல இளையோர் தமது கல்வியை நிறைவு செய்ய முடியாது போராடுகிறார்கள். அவர்களது ஆரோக்கிய வாழ்வுக்கு உதவி தேவைப்படுகிறது. இலேசான மனநலப் பிரச்சினைகள் உள்ளவர்களுகளை விரைவாக கண்காணிப்பதன் மூலம் அவர்களை அன்றாட வழமை வாழ்வுக்குள் நடைபோட வைக்கலாம் என்பது பேர்கன் உளநலப் பிரிவினரின் கருத்தாகும்.*

*பதட்டம், மனச்சோர்வு, போதைப்பொருள் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான பிரச்சனைகள் போன்றவை முதல் மிதமான நோய்கள் உள்ளவர்களுக்கு நகரசபை உதவி வழங்குகிறது. வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்புவோருக்கும் இந்த சிகிச்சை முறைமை பயனுள்ளதாகும். அத்துடன் உளவியல் தாக்கங்களை எதிர்கொண்டு சமாளிக்கும் திறனை பெற்றுக் கொள்ளுவதற்கான கல்வித் திட்டங்களையும் வழங்குகின்றனர்.*



# ஒன்றுகூடல்

-தர்மினி-

ஒருவர், பக்கத்தில் நின்றிருந்தவரிடம்
எங்கேயோ கண்டோமே என்று கேட்டு
ரியூட்டரியில் போய் நின்றார்.
இன்னுமொருவர்
வராதவர்களைத் தேடிக் கொண்டிருந்தார்.

ஐயோவென்று மற்றொருத்தர் புலம்பல்.
ஆண்-பெண் நட்பற்ற
அக்கலாச்சார காலத்தைக் கடுமையாகத்
திட்டுகிறார்.

அவள் அமர்ந்திருந்தாள்.
அருகே ஒருவன் நின்று கொண்டிருந்தான்.
பக்கத்தில் இருங்கள் என்றாள்.
மேடையில் நடந்த நடனத்தைப் பார்த்தபடி
சும்மா பக்கத்தில் இருந்தார்கள்.
"சும்மாவும் பொடியங்களை நிமிர்ந்து பார்க்கக்
கூடாது"
என்ற அக்காலத்தைப் பழிவாங்கியபடி
மேசையில் தாளமிட்டுக் கொண்டிருந்தாள்.

கோட்டுகளும் பட்டுச்சேலைகளும்
எவர் கவனத்திலும் இல்லை.

கற்பனைகளில் ஒவ்வொருத்தருக்கும்
பள்ளிக்கூடச் சீருடை, கழுத்துப் பட்டி.

நாகரீகமாக அடுக்கப்பட்டிருந்த நாற்காலிகள்
குழம்பி விட்டன.

முகங்களை மறைத்த அலங்காரங்கள் கலைந்தன.

தட்டுகளில் கோப்பைகளில் சிரிப்புகளும்
கதைகளும் எஞ்சியுள்ளன.

சொல்லாமல் விடைபெற்ற நாள்களில் நின்று
கொண்டிருந்தார்கள்.

ஆளுக்காள் எந்த இடம் என்று
சுகம் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.
தொலைத்து விட்ட
சிறுபராயத்தைத் தேடும் பார்வைகள்.

அன்று போலவே
குழுவாகக் கூடிக்கதைக்கிறார்கள் சிரிக்கிறார்கள்.
ஐம்பதே ஆனாலும்
எங்களுக்கு நாங்கள் Boys தான்.
Girls தான்.

எல்லா விதமான நட்புகளுக்கும் இடையில்
பால்ய காலத்தின் பரிசுத்தம் மிதக்கிறது.

கடைசியாக ஊரைவிட்டு வெளிக்கிட்டதிலிருந்து...
பரீட்சை முடிந்த நாளிலிருந்து...
பிறகு என்ன நடந்தது எனக் கேட்கிறார்கள்.

குடும்பப் படங்களை
கைபேசிகளில் காண்பிக்கிறார்கள்.
இந்தப் பொழுதையும் சேமிக்கிறார்கள்.

எல்லோரும் அடையாளங்கள் அழிந்த
தோற்றங்களில் கண்டபோது
இது பல ஆண்டுகள் நீண்ட நட்பாயிருந்தது.

சின்ன வயதின் சாடைகள்
மங்கிப் போகாத காலமாக இசை அதிர்கிறது.

நரைத்த தலைகளும் பெருத்த வயிறுகளும்.
தளர் நடைகளும்
பள்ளிக்கூட மாறுவேடப் போட்டி போலிருக்கிறது.

*-தர்மினி-*
*11.01.2025*

# Hamas பிணைக் கைதிகள் பட்டியலை ஒப்படைத்துள்ளது.



Hamas பிணைக் கைதிகள் பட்டியலை ஒப்படைத்துள்ளது. 2023 ஓக்டோபர் 7ம் நாளன்று பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களில் 25பேர் இன்னும் உயிருடன் இருப்பதைக் காட்டும் பட்டியலை Hamas வழங்கியுள்ளதாக றோய்ட்டர்ஸ் செய்தி தெரிவிக்கிறது.
இஸ்ரேலுக்கும் காமாசுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, 33 பணயக் கைதிகள் விடுவிக்கப்பட உள்ளனர்.
Hamas செய்தித் தொடர்பாளர் செய்தி நிறுவனத்திடம் கூறுகையில், போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மத்தியஸ்தர்களிடம் இந்தப் பட்டியலைக் கொடுத்துள்ளதாகவும், அவர்கள் அதை இஸ்ரேலிய அதிகாரிகளிடம் ஒப்படைப்பார்கள் என்றும் கூறினார்.

## பாலஸ்தீனியர்கள் வடக்கு காசாவிற்குத் திரும்ப அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.



பாலஸ்தீனியர்கள் திங்கட்கிழமை வடக்கு காசாவிற்குத் திரும்பத் தொடங்கினர் என்று காசாவில் உள்ள காமாஸால் நடத்தப்படும் உள்துறை அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் AFP இடம் கூறியுள்ளார்.

இது இஸ்ரேலுக்கும் காமாசுக்கும் இடையே எட்டப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு இணங்க நடைபெறுகிறது.

ஆனால் வார இறுதியில், காமாஸ் பொதுமக்களுக்குப் பதிலாக நான்கு பெண் வீரர்களை விடுவிப்பதன் மூலம் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக இஸ்ரேல் நம்பியதாலும், உயிருடன் இருக்கும் பணயக்கைதிகளின் பட்டியலை அவர்கள் வழங்காததாலும் திறப்பு விழா ஒத்திவைக்கப்பட்டது.




*அமெரிக்கா நோர்வேயின் பிரதான நகரில் ஒன்றான Kongsberg நகரிலுள்ள ஆயுத தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து அதிகமான ஏவுகணைகளை கொள்வனவு செய்கிறது.*
*Kongsberg இலுள்ள ஆயுதத் தொழிற்சாலையிலிருந்து ஏவுகணைகளை வாங்குவதற்கு அமெரிக்கா முன்னர் ஒப்பந்தம் செய்திருந்தது. அவ்வொப்பந்தத்தை அமெரிக்கா மேலும் 70 மில்லியன் டொலர்களுக்கு மேலதிகமாக நீட்டித்துள்ளது.*
*அமெரிக்க பாதுகாப்புத் துறையின் அறிக்கையைக் குறிப்பிட்டு, Kongsberg பாதுகாப்பு மற்றும் விண்வெளி நிறுவனம் ஒரு செய்திக்குறிப்பில் இதனைத் தெரிவித்துள்ளது.*
*இன்றைய மாற்று விகிதத்தில் 788 மில்லியன் கொரோனருக்கு சமமான $70 மில்லியன் மதிப்பிலான மாற்ற உத்தரவின் அறிவிப்பை ஆயுத நிறுவனமான இந்த நிறுவனம் அமெரிக்க பாதுகாப்புத் துறையிடமிருந்து நிலையான விலையில் பெற்றுள்ளது.*
*இந்த உத்தரவு அமெரிக்க விமானப்படைக்கான கூட்டுத் தாக்குதல் ஏவுகணைகள் (JSM) தொடர்பானது, மேலும் இந்த ஒப்பந்தம் 2024 ஆனி மாதத்தில் கையெழுத்தானது. ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பு இப்போது 208 மில்லியன் டொலர்களாக காணப்படுகிறது, இது 2.34 பில்லியன் குரோனருக்கு சமமாகும். இந்த ஒப்பந்தம் 2027ஆம் ஆண்டில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

## Norsk olje

*எதிர்பார்த்ததை விட நோர்வேயின் எண்ணெய் வரி வருவாயாக 29 பில்லியன் குறோணர்கள் அதிகம் பெறப்படுகிறது. 2024 ஆம் ஆண்டிற்கான எண்ணெய் வரி எதிர்பார்த்ததை விட அதிகமாக இருக்கும். இதனால் நோர்வே சேமிப்பகம் எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து 29 பில்லியன் குரோனர் எதிர்பார்த்ததைவிட அதிகமாகப் பெறவிருக்கிறது.*
*நோர்வே வரி நிர்வாகம் கடந்த ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட பெட்ரோலிய வரி NOK 352 பில்லியனில் இருந்து NOK381 பில்லியனாக அதிகரித்துள்ளது.*
*இது 8.2 சதவீதம் அதிகமாகும். இந்த வரி வருவாய்கள், எண்ணெய் நிதி என்று பிரபலமாக அறியப்படும் அரசாங்க ஓய்வூதிய நிதியமான குளோபலுக்குச் செல்கின்றன. இதனால் வருவாய் தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு சேமிக்கப்படுகின்றது.*







# Jaffna to Colombo - Colombo to Jaffna

-நிலாந்தன்-

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணப் போக்குவரத்து நேரம் கிட்டத்தட்ட ஏழு மணித்தியாலம். இக்காலப் பகுதியில் பெரும்பாலான பெண்கள் நீர் அருந்துவதில்லை. ஏன் என்று கேட்டால் இடையில் அவர்கள் சிறுநீர் கழிப்பதற்காக நிறுத்தும் இடங்களில் சிறுநீர் கழிக்க முடியாது. அவை அசுத்தமாகவும் அருவருப்பாகவும் இருக்கும். அந்த இடத்தை நெருங்கும் பொழுதே துர்வாடை வீசும். அந்த இடத்தில் கால் வைப்பதற்கே கூசும். முறிகண்டியில் கட்டணம் செலுத்தும் கழிப்பறைகள் உண்டு. அங்கேயும் நிலைமைகள் பாராட்டும் அளவுக்குச் சுகாதாரமாக இல்லை.

பொதுக் கழிப்பறைகளை தொடர்ச்சியாகக் கழுவி, துப்புரவாகப் பேண மாட்டார்கள். அந்த அசிங்கத்துக்குள் போனால் சகல நோய்களும் தொற்றிக்கொண்டு விடும் என்ற அச்சம் ஏற்படும். எனவே சிறுநீர் கழிப்பதற்கு ஒரு நரகத்துக்குள் போவதை விடவும், சிறுநீரை 6 மணித்தியாலங்களுக்கு அடக்கி கொண்டிருப்பதை விடவும், நீரைக் குடிக்காமல் விடலாம் என்று ஒரு பகுதி பெண்கள் கருதுகிறார்கள். இதுவும் ஆபத்தானது. நீண்ட தூர, நீண்ட நேரப் பயணங்களில் நீரிழப்பால் உடலுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து அதிகம்.

---

பொதுப் போக்குவரத்து வாகனங்களை சாப்பாட்டு இடைவேளைக்காக அல்லது சிரம பரிகாரத்துக்காக எங்கே நிறுத்துவது என்பதனை பயணிகள் தீர்மானிக்க முடியாது. வாகன உரிமையாளர்களும் சாரதிகளும்தான் அதைத் தீர்மானிக்கிறார்கள். அது வாகன உரிமையாளருக்கும் குறிப்பிட்ட சாப்பாட்டுக் கடைக்கும் இடையிலான ஒரு வணிக உடன்படிக்கை. இருதரப்புக்கும் அங்கு லாபம் உண்டு. பயணிகளை வைத்துப் பணம் சம்பாதிக்கும் இந்த இரண்டு தரப்புக்கும் பயணிகளுக்கான கழிப்பறைகளை சுகாதாரமாக பேண வேண்டிய பொறுப்பு உண்டு.

அவர்கள் வாங்கும் பயணச் சீட்டுக்குள் அந்தச் செலவும் அடங்குகிறது. பயணிகளின் கழிப்பறை வசதிகளை சுகாதாரமாகப் பேண வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. அதற்கும் சேர்த்துத்தான் கட்டணம் அளவிடப்படுகிறது. எனவே இந்த விடயத்தில் நீண்ட தூரப் பயணங்களில் ஈடுபடும் வாகன உரிமையாளர்களுக்கும் சாரதிகளுக்கும் அவர்கள் எந்தெந்த இடங்களில் நிறுத்துகிறார்களோ அந்த இடங்களில் உள்ள உணவக உரிமையாளர்களுக்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு. இவை அனைத்தையும் நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. □

# இயற்கையின் காதலி கீதா




ஏற்கனவே தேன் தமிழிதழ் வாசகர்களுக்கு அறிமுகமானவர்தான் புகைப்படக் கலைஞர் கீதா இரவி அவர்கள். சிறந்த ஒளியோவியக் கலைஞர், இயற்கையின்பால் அதீத அன்பும் அக்கறையும் உள்ளவர். எழுத்தில் உருவாக்கப்படும் ஆயிரம் பக்கங்களைத் தனது ஒருசில புகைப்படங்களுக்குள் சொல்லிவிடும் அபரிதமான ஆற்றல் கொண்டவர். சக்கர நாற்காலியில் இலங்கை சென்ற புகைப்படக் கலைஞர் ஒஸ்லோ கீதா இரவி அவர்கள் அங்கும் தனது கமெராப் பரிவாரங்களோடு களமாடுகிறார். சக்கர நாற்காலியில் பயணித்த படியே. புகைப்படக் கலைக்காக நோர்வேயின் பல விருதுகளையும், பெறுமதிமிக்க அங்கீகாரங்களையும் தனதாக்கிக் கொண்டவர். ஒரு கலையாளுமைக்கு, இயற்கையைக் காதலிக்கும் மானுடத்துக்கு இருக்கவேண்டிய ஆத்மார்த்தப் பண்பு என்பது இதுதான். இவரது சில படங்களையும் படக் குறிப்புக்களையும் நாமும் பகிர்ந்து கொள்வோம்.

அடிக்கடி மழை. வாங்கிக் கொண்டு வந்த el.Weelchiar அவ்வளவு பலமில்லை. மழையில் புதைகிறது. அதனால் வீட்டு அவுட் ஹாலில் மழை, தேநீர், சிற்றுண்டி, பறவைகள் ஒலி என பொழுது இனிதாகக் கழிகிறது. போக முடியாவிட்டாலும் பறவைகள் வீட்டுக்கே வந்து சுகம் விசாரிக்கின்றன. வீடு இயற்கை சூழலில் அமைந்திருப்பதால் மனதுக்கு அமைதி தருகிறது. வீட்டில் இருந்து எடுத்த சில படங்கள்

வண்ணங்கள் அழகு...
வண்ணத்துப்பூச்சிகள் பேரழகு...





மாம்பழம் கோந்திக் கொண்டிருந்த பச்சைக்கிளியைத் துரத்திவிட்டுத் தான் கொந்தியது பச்சைக்குக்குறுவான்



இம்முறை மயிலாட்டம் பார்க்க மூன்று முறை சந்தர்ப்பம் கிடைத்தது. நெருக்கிக் கிளுவை மரங்களில் அடித்த முள்வேலி. பாதையில் இறங்கி முள்வேலிக்கு அருகில் சக்கரநாற்காலியில் செல்ல முடியாதளவு பள்ளம். பாதையில் நின்ற படியே சிறிய இடைவெளி மூலம் focus பண்ண வேண்டும், focus பண்ணியவுடன் அது நகர்ந்து போய் ஆடும். பின் இன்னும் ஒரு இடைவெளி மூலம் focus செய்ய வேண்டும். ஆயினும் லென்ஸ் மூலம் ஆனந்த நடனத்தைக் கண்டு களித்தேன்.





பச்சைப் பஞ்சுருட்டான் (Merops orientalis) அல்லது சிறிய பச்சைப் பஞ்சுருட்டான் அல்லது பச்சை ஈப்பிடிப்பான் (Green Bee-eater)

Purple sunbird
ஊதா தேன்சிட்டு





யாரது காலையிலேயே மரம் ஏறுவது.
அட, நம்ம அணிலார் தானே...

# முபாரக்கின் மூன்று குறிப்புகள்



M.A.Yaseer Arafath

## குறிப்பு:1



பாகிஸ்தான் பஞ்சாப் மாநிலத்தில் 8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான Gold deposit கண்டுபிடித்துள்ளது. கடந்த ஆண்டு 50 பில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டும் உலகில் மூன்றாவது பெரிய Petroleum Deposit கண்டுபிடித்தது.

பாகிஸ்தான் மொத்த கடன் 125 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இலங்கையில் இதுபோன்ற எது விதமான கண்டுபிடிப்புகள் நிகழவில்லை. எனினும் நமது கடன் கிட்டத்தட்ட 108 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டிப்போகிறது. ஏதாவது அதிசயம் நிகழ்ந்தாலேயொழிய இந்த ஜென்மத்தில் இலங்கையில் கடன்களை அடைக்க முடியாது.

## குறிப்பு:2



இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த போது நமது தனி நபர் வருமானம் ஆசியாவில் இரண்டாவது இடத்தில் இருந்தது. தற்போது நாம் இருப்பது 28வது இடத்தில் ஆசியாவில் மொத்தம் 42 நாடுகள் இருக்கின்றன. நம்மை 26 நாடுகள் ஓவர்டேக் செய்துள்ளார்கள்.
கடைசியாக ஓவர் டேக் செய்தது வியட்நாம்.
அடுத்து செய்ய இருப்பது பிலிப்பைன்ஸ் மற்றும் கிழக்கு திமோர். உனக்கும்கீழே உள்ளவர் 14 நினைத்து பார்த்து நிம்மதி நாடு.

## குறிப்பு:3




இலங்கையில் ஊழல் என்பது புதிய விடயமல்ல கால காலமாக இருந்து வந்ததுதான் ஆனால் முதன்முதலாக கலாச்சாரமாக ஊழல் பரிணமிக்க ஆரம்பித்தது 1970-1977 சிறீமாவோ காலத்தில் தான்.

அதன் பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலத்தில் தேசத்தின் பீடையாக மாறியது.
பிரேமதாச காலத்தில் இது நோயாக மாறி,
சந்திரிக்கா - ராஜபக்ஷ- மைத்திரி- கோட்டாபாய காலங்களில் படிப்படியாக மோசமாகி இன்று புற்றுநோயாக மாறி இறுதியில் தேசத்தின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் ICU பெட்டில் படுக்க வைத்து விட்டது.
கடைசியாக இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தவர்களில் ஒருவரான ரணில் உண்மையில் CPR கொடுத்து தான் ஓரளவுக்கு Vitals Maintenance செய்து வைத்திருக்கிறார். இந்த அரசும் ஊழல் வீண்விரயம் ஒழிப்பில் அசமந்தமாக Lackadaisical approach எடுக்கும் ஆயின் அடுத்தது நாட்டுக்கு Ventilatory Support தான் தேவைப்படும்.

# மயிலிறகின் உயிர்த்தல்....

-மாலினி மாலா-



உன்னிடம் சேர்ப்பித்து விட வேண்டும்
என்பதற்காகவே சேகரித்தும்
ஏதோ ஒரு வீம்பில்
கொடுக்காமல் சேர்ந்தவை
ஏராளமுண்டு.

ஒவ்வொரு முறை
விழிகள் சந்தித்து மீள்கையிலும்,
எதிர்பார்ப்பில் நிறையும் உன்
பார்வையிலிருந்து
நேசம் கொண்ட குழந்தையின்
சிறு குறும்பின் வீம்பினையொத்து
மறைத்தவை தான்
அதிகம்.

எல்லோருக்கும் பகிர்ந்தளித்த
கடலோரக் கிளிஞ்சலுக்கு
ஏங்கவைத்து விட்டு ,
இறுதிவரை தராமலே
உனக்கென மறைத்துவைத்த
ஒரேயொரு வலம்புரி.

நீ ஓட்டிவைத்துச் சென்ற
ரோஜாவில் மலர்ந்த
முதல் பூ...

மஹோகனி பிளந்து உன்
சுருள் முடிக் கற்றையில்
சுழன்று வந்தமர்ந்த ஒற்றை விதை,

உன்நடுப்பக்கக் கொப்பியில்
வரைந்த நம்
பக்கவாட்டு நிழலோவியம்.

எதிரெதிர் அமர்ந்த
நீண்டதொரு
ரயில் பயணத்தில்
உனக்காகவே எழுதிய
மூன்றுவரி முதல் கவிதை,


ஒரு நீண்ட கால
விடைபெறுதலின் போது,
உதடுவரை வந்து
ஒரு தலையசைப்பில் மறைந்து
மீண்டும் சந்திப்போம் என்பதான
நம்பிக்கையில்
சிறு தலையசைப்புடன்
பற்களின் சிறைக்குள்
நெரியுண்டு இறந்த
ஒற்றை முத்தம்,

குட்டிபோடாதென்று
தெரிந்த பிறகும்
எடுத்துவீச மனமற்று
புத்தகத்தினுள் தூங்கும்,
குட்டிபோடும் என்ற நம்பிக்கையில்
நீ தந்த மயிலிறகினைப் போல
மனப்பெட்டகத்தின் அடியிலிருந்து
எடுத்தெடுத்துப் பார்க்கிறேன்
உயிர்க்கிறேன் பின்
மூடிவைத்து விடுகிறேன்
எவருமறியாமல்
நீயும் அறியாமலே.....

இப்போது வீம்பென்று
எதுவுமில்லை.
காலத்தின் வீம்பின் முன்
நாமெல்லாம் எதுவுமேயில்லை .

சிறுகதை

# தற்குறி வெள்ளாடு



தமயந்தி

ஒரு ஊரில ஒரு தற்குறி வெள்ளாடு வாழ்ந்து வந்தது. அந்த ஊரில வேறும் பல ஆடுகளும் குட்டிகளும் இருந்தபோதிலும், அவற்றுள்ளிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட ஒருதற்குறி வெள்ளாட்டின் கதை இது.

பெயர் வினாகு. கறுப்பு நிறம்.
கொடுவாய்க் கத்தியும், வெட்டுக்குத்தியும் புளங்கும் இடத்தையே சுற்றிச் சுற்றித் திரிகின்ற ஒரு தற்குறித் தனமான ஆடு. எப்போது அந்த வெட்டுக்குத்திமேல் தூக்கிக் கிடத்திவைக்கப்பட்டு கழுத்தில் கொடுவாய்க்கத்தி இறக்கப்படும் என்பதையே விளங்கிக்கொள்ள வகையறியா ஆடு.

வினாகு.
அந்த ஊரில் பட்டணத்துச்செட்டி என்று அழைக்கப்படும் மாலாயாக் கப்பல் பென்சனியரின் நெடுப்பி என்ற ஆடு ஒரேயொரு குட்டியை ஈன்ற எட்டாம் நாள் நல்லபாம்பு கொத்திச் செத்துப்போய் விட்டது. தாயை இழந்த எட்டு நாட்களேயான குட்டியை என்ன செய்வதென்று புரியாமல் பென்சனியர் தவித்துப் போயிருக்கும் போதுதான், பென்சனியரின் வீட்டிலிருந்து நான்காவது தெருவில் குடியிருந்து பலகாரச்சாப்பாடு சமைத்து விற்கும் பலகாரம்மா அனந்தானாச்சி அன்றைய காலைச் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டுப்போக பென்சனியரின் வீட்டுக்கு வந்திருந்தார். அனந்தானாச்சியிடம் நெடுப்பி செத்துப்போன கதையைச் சொன்னார் பென்சனியர். குட்டியைத் தன்னிடம் தரும்படியும், தான் வீட்டில் வைத்து வளர்ப்பதாகவும் அனந்தானாச்சி கேட்டார். குட்டியைத் தந்தால் பதிலுக்கு என்ன தருவாய் என்று பென்சனியர் பதிலுக்குக் கேட்டார்.

“அட போக்கத்த மனுசா.. இந்தப் பச்சப்பாலாவரயன வச்சு என்ன செய்யப்போறாய் நீ..? இந்தப் பாவத்தயும் காசாக்கப் பாக்கிறியா? புள்ளயளுமில்லக் குட்டியளுமில்ல பெண்சாதிக்காறியுமில்ல மலேயாப் பென்சன் காச என்ன செய்யிறேண்டு தெரியாமல் சக்குப் புடிக்க விட்டுக்கொண்டிருக்கிறாய்... அதுக்குள்ள வாயில்லாப் பூச்சியயும் காசாக்க நிக்கிறியா...”

ஐந்து வெள்ளையப்பங்களும், இரண்டு விளைமீன்களும் கொடுத்து பதிலுத்தரமாக அந்தக் குட்டியாட்டை வாங்கிக்கொண்டார் பலகாரம்மா.

பலகாரம்மா அனந்தானாச்சி ஆசையாக வைத்த பெயர்தான் வினாகு. வினாகுக்கடம்பன் என்ற தனது அப்புவின் பெயரிது.

அனந்தானாச்சி யாழ்ப்பாணம் பொன்னம்மா மில்லடிக்குப் போய் இன்னாசித்தம்பியின் கடையில் புதிதாகப் போச்சிப்போத்தல் வாங்கிவந்து, தனது மறைச்சி என்ற பசுவில் பால் கறந்து சூடாக்கி ஆறவைத்து அந்தப் போச்சிப் போத்தலுக்குள் விட்டு பருக்கிப் பருக்கி வளர்த்து வந்தார். வினாகு விடலையானதும் ஆல், அரசு, கிளிசீனியா, வாத நிவாரணி, தாழங்குருத்து, பொன்னொச்சி, முசுட்டை, நெல்லுப்பச்சைக் களனி, புழுங்கலரிசிக்கஞ்சி என விதம் விதமாக விடாமல் ஊட்டி வளர்த்தார். வினாகு மளமளவென வளர்ந்து விடலைப் பருவத்தையும் தொட்டு விட்டது.

குடுமிச் சோமருடைய தோட்டத்தில்தான் எப்போதும் வினாகுவுக்கு இருகண்கள். ஏனெனில் அந்த

வட்டாரத்திலேயே தனது முழுத் தோட்டத்திலும் வெண்டி விவசாயம் மட்டுமே செய்து வருபவர் குடுமிச்சோமர் மட்டும்தான். ஊடே சில பூசணிக்கொடி போடுவாரே தவிர மாற்றுப்பயிரெதுவும் செய்வதில்லை. வினாகுவுக்கு வெண்டியென்றால் கொள்ளைப் பிரியம். வெண்டியைச் சப்பிச்சப்பி அசைபோடும்போது கடை வாயால் வாய்க்கால்போல் வெண்டிச்சாறு வழிவதும், அதை நீண்ட நாக்கினால் உள்ளெடுத்து விழுங்குவதும் வினாகுவுக்கு மெத்தவும் பிடித்திருந்தது.



குடுமிச் சோமர் பலதடவைகள் அனந்தானாச்சியை எச்சரித்து விட்டார். "குட்டிய வீட்டில கட்டிவச்சு வளத்துக்கொள் இல்லயெண்டால் வீணான பொல்லாப்பு வரும் சொல்லிப்போட்டன் அனந்தானாச்சி" என இறுதி எச்சரிக்கையும் கொடுத்து விட்டார் சோமர். இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்ட மறுநாளும் வினாகு வெண்டித் தோட்டத்துக்குள் புகுந்து விட்டது. வினாகுவைக் கலைத்துப் பிடித்துத் தோட்டக்கிணற்றடி வேம்பில் கட்டிப்போட்டு விட்டார் சோமர்.

"என்ன வேல பாத்து வச்சிருக்கிறியள் சோமரே...?! நயிலோன் கயித்தால கழுத்த இறுக்கிக் கட்டி வச்சிருக்கிறியள்... செத்துக்கித்துப் போச்சுதெண்டால் சும்மா விடுவனெண்டு நினச்சியளோ... இஞ்சவிடு..." அனந்தானாச்சி நாகுவை அவிழ்க்கப் போனார்.

"விசர்க்கத பறயாத அனந்தானாச்சி..... அஞ்சாறு கிலோ வெண்டிய உன்ர தற்குறி திண்டுபோட்டுது.... மரியாதயா ஆயிரன்ரூவா எடுத்து வச்சுப்போட்டு அவுத்துக்கொண்டுபோ"

"வாரும் வாரும் பிந்தோரே, நல்ல கததான் நீளமில்லயாம்... அஞ்சாறு கிலோவத் தின்னுறதுக்கு வயிறென்ன வக்கா வாய்க்காலா? பொய்யச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேணும்" வேம்பில் கட்டிப்போட்டிருந்த நாகுவை விடுவித்த அனந்தானாச்சி, தனது சேலைத் தலைப்பில் முடிந்து வைத்திருந்த நூறுரூபாயை அவிழ்த்து சோமரிடம் நீட்டினார்.

"இதென்னது நூர்றுவா....? சும்மா தனகாத அனந்தானாச்சி.... ஆயிரன்ரூவா எடுத்து வச்சுப்போட்டுப் போ" சோமர் நூறு ரூபாவை வாங்க மறுத்தார். மீண்டும் தனது முந்தானையில் பணத்தை முடிந்துபோட்ட அனந்தானாச்சி, "இன்னொருக்கா வந்து வெண்டியத் திண்டானெண்டால் அதோட சேத்துவச்சுத் தாறன்" சொல்லியபடியே தோட்டத்தை விட்டு வெளியேறினார் அனந்தானாச்சி. மேற்கொண்டு எதையும் பேசமுடியாதவராக நின்றார் சோமர். அனந்தானாச்சியோடு வாய் கொடுத்தால் அவ்வளவுதான். அப்பத்துக்கு மாப் புளிக்க வைத்து விடுவதுபோல் ஆக்கிவிடுவார்.

வினாகுவை வளவுக்குள்ளேயே கட்டிப்போட அனந்தானாச்சிக்கு கொஞ்சமும் உவப்பில்லை. துள்ளி விளையாடுகிற பருவத்தில் கட்டிப்போடுவதா....? "மன்னிச்சுக்கொள்ளடா கிறுக்கா, மனமில்லாமத்தான் இதச் செய்யிறன். நானென்ன செய்ய.... நீ செய்யிற துடியாட்டத்துக்கு என்னதான் செய்யேலுஞ் சொல்லு. போயும்போயும் சோமற்ற குடுமிக்குள்ளயா நீ பூந்து மேயவேணும்...?" வேலி புகமுடியாதபடி கழுத்தில் முக்கோணமாக மட்டை கட்டப்பட்டது வினாகுவுக்கு.

இந்தக் கதை இப்படியே இருக்க, அந்த ஊரின் கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவர்தான் அனந்தானாச்சியின் மருமகன் பரிபூரணம். அனந்தானாச்சியின் ஒரேயொரு மகளான காணிக்கையம்மாவின் கணவர். அந்த ஊருக்குள் வரும் அரச அதிகாரிகளும், தொண்டு நிறுவனங்களின் உத்தியோகஸ்தர்களும், அண்ணாவிமாரும் தலைவர் பரிபூரணத்தாரின் விருந்தாளிகளாகி உண்டு குடித்து மகிழ்ந்து களித்துத்தான் போவார்கள். பரிபூரணத்தார் ஊருக்குள் பெருந்தலை.

வினாகுவின் வளர்த்தியும், போக்குவரத்தும், குணம் குறிகளும் பரிபூரணத்தின் கண்களை உறுத்தத் தொடங்கியது. "ஒரு நாளைக்கு உன்னச் சட்டியில கொத்திப் போடாமல் விடமாட்டன் சுறுக்காரே" என மனதுக்குள் அடிக்கடி சொல்லிக் கொள்வார் பரிபூரணத்தார்.
மருமகனின் உள்ளகப் பொச்சம் என்னவென்பதை அனந்தானாச்சி மோப்பம் பிடிக்காமலில்லை. மாமியார் மருமகன் இருவரின் மனவெளிக்குள் இப்படியொரு பனிப்புகாரானது மப்பும் மந்தாரமுமாக உலவிக்கொண்டேயிருந்தது.

இப்படியிருந்துவாற காலத்திலதான் ஒருநாள், யாழ்ப்பாண வெளியேற்றத்தோடு வன்னிக்கு அள்ளுண்டு, அதன்பின் வங்காலையில்

மீள்குடியேறியிருக்கும் தங்கையையும் பிள்ளைகளையும் காணவென்று அனந்தானாச்சி பயணித்து விட்டார். அங்கு அவர்களோடு ஒரு வாரம் தங்கிவிட்டு ஊர் திரும்பிய அனந்தானாச்சிக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. வினாகு வீட்டில் இல்லை. என்ன ஏதென்று விபரங்களை விசாரித்தறிந்த அனந்தானாச்சி இடி விழுந்தாற்போல தலையில் இரு கைகளையும் வைத்தபடியே முற்றத்தில் அமர்ந்து விட்டார்.

அனந்தானாச்சி வங்காலைக்குப் பயணமான மறு நாளே வினாகுவை முப்பது வெள்ளிக் காசும், ஒரு பங்குத் தொடைக்கறியும் என்ற ஒப்பந்தத்தில் பொம்மைவெளி சுல்த்தானின் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டார் பரிபூரணத்தார் என்பது அனந்தானாச்சிக்குக் கிடைத்த செய்தி. "எங்கடியந்த ஈழிஞ்ச பெரிய மனிசன்...?" வீடுமுழுவதும் தேடிப் பார்த்தார். அனந்தானாச்சியின் கண்களில் படாமல் பரிபூரணத்தார் ஓடி ஒழிந்துகொண்டார். குய்யோ முறையோவென அனந்தானாச்சி வளவுமுழுவதும் ஓடித் திரிந்தார். வண்ணியிலிருந்து வந்தபடிக்கே உடையை மாற்றாமல் அப்படியே அனந்தானாச்சி பொம்மைவெளிக்கு சுல்த்தானைப் பார்க்கப் புறப்பட்டார்.

"பொறுதி..., பொறுதி, பொறுதி அனந்தானாச்சி...., இப்ப என்ன நடந்து துலைச்சதெண்டு துள்றே நீயி...?" அனந்தானாச்சியின் இடி முழக்கத்தைத் தாங்கமாட்டாத சுல்த்தான் தன்னால் முடிந்தவரை சமாதானம் செய்து கொண்டிருந்தார்.

"அந்தப் போக்கத்த மனிசனுக்குத்தான் மூளகீழ இல்லயெண்டால் காக்கா உனக்கெங்க போச்சு பகுத்தறிவு. அந்த வாயில்லாச் சின்னஞ்சிறுச வெட்டச்சொல்லித் தந்தா நீயும் புத்திகெட்டுப்போய் வாங்குவியா காக்கா...? அவர் புடிச்சுத் தரவும், நீ அறுத்துக் கொட்டவுமா நான் ஆசயாசயா வளத்தனான்...?" அனந்தானாச்சி பொரிந்து தள்ளினார்.

"பொறுதி அனந்தானாச்சி, பொறுதி.... நான் சொல்றதயும் கொஞ்சம் காதில வாங்கிறியா போக்கத்தவளே...?"
"ம்... சொல்லு காக்கா"
"பின்னால போய்ப் பாரு..... வினாகு கட்டி நிக்கிறான். ஒரு கிழமயா ஆலில குத்திப் போட்டுக்கொண்டு வாறன். சைத்தானாட்டம் அந்த உசுக்குட்டிய நான் வெட்டுவனா சொல்லு. எனக்குத் தெரியாதா அனந்தானாச்சி, நீ எவளவு பாசமா வளக்கிறாயெண்டு. கண்ண மூடிக்கொண்டு வெட்டிப் போடுவனெண்டு நினச்சயா மொக்குப்புள்ள?"

அனந்தானாச்சி சுல்த்தானின் வீட்டுக்கோடிக்கு ஓடிச் சென்றார். அனந்தானாச்சியைக் கண்ட வினாகு துள்ளிக் குதித்தான். வினாகுவை அள்ளித்தூக்கி கொஞ்சித் தள்ளினாள். அனந்தானாச்சியின் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீரும் சிந்தித் தள்ளியது.


"குடுமிச் சோமனட்டத்தான் வெண்டிக்காகக் குத்துப்பட்டுச் சாகப்போறியோ எண்டு பயந்துகொண்டிருந்தன்.... நீ என்னடாண்டால் போயும்போயும் உள்வீட்டு வெள்ளவேட்டிக் குத்தியனட்யா வெட்டுப்பட்டுச் சாகவேணும் தற்குறி, தற்குறி" வினாகுவை கட்டவிழ்த்து வாரித்தூக்கி அணைத்தபடி சுல்த்தான் வீட்டு முற்றத்துக்கு வந்தார் அனந்தானாச்சி.

"அதெல்லாஞ்சரி காக்கா, எவ்வளவு குடுத்தனி அந்த மனிசனுக்கு சொல்லு நான் தாறன்...?"
"அதெல்லாம் நீ ஒண்டும் தரவேணாம் அனந்தானாச்சி.... நீ உசுக்குட்டியன வீட்டுக்குக் கொண்டு போ"
"சொல்லு காக்கா.... எவ்வளவுதான் குடுத்துத் துலைச்சனி...?"
"முப்பதும் ஒரு பங்கு கறி எண்டும் பேச்சு"
"சரி காக்கா, நீ ஒரு பங்கு அந்த மனிசனுக்கு எங்கயாவது வாங்கிக் குடு, பயத்தில ஓடி ஒழிச்சிட்டான் மனிசன். முப்பதும் நான் தாறன்"
சேலைத்தலப்பிலிருந்து பணத்தை அவிழ்த்துக் கொடுத்தார் அனந்தானாச்சி. பெரும் சங்கடத்தோடு பணத்தைப் வாங்கிக் கொண்டார் சுல்த்தான்.

வினாகுவையும் தூக்கிக்கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்த அனந்தானாச்சிக்கு இன்னொரு வேடிக்கையான அதிர்ச்சி வாசலில் காத்திருந்தது. குடுமிச்சோமர் வீட்டு வாசலில் அனந்தானாச்சியின் வருகைக்காகக் காத்து நின்றார். "என்ன சோமர் இந்தப் பக்கம்.?"
"கனக்கக் கதைக்காத அனந்தானாச்சி. இண்டைக்கு இறைப்புக்கு நான் வாறதுக்குமுந்தி காலமவெள்ளண உன்ர தற்குறி உள்ள பூந்து வெண்டி கிண்டியெல்லாந் திண்டு போட்டுது. முழுக்காசயும் எடுத்து வை. மரியாத கெட்டிடும் சொல்லிப்போட்டன்"
அனந்தானாச்சிக்கு சிரிப்பு அடக்க முடியவில்லை.
"சோமரே...., ஒரு சங்கதி சொல்லுறன் அதமட்டும் கேட்டுப்போட்டுப் போரும் இந்தக் குட்டியாடு தற்குறியா இல்லையாண்டு எனக்குத் தெரியாது. ஆனாலொண்டு கனக்கத் தற்குறியள் எனக்கு முன்னால உலாத்தித் திரியிறியள். இதுக்குமேல ஒருநொடி இதில நிண்டியளெண்டால் வீணான பொல்லாங்கு வந்துபோடும் சொல்லிப்போட்டன்"

குடுமிச்சோமர் அவ்விடத்தை விட்டு நைசாக நழுவத் தலைப்பட்டார். ☐

# சொர்க்கவாசலில் ஷோபாசக்தி



பேராசிரியர் அ.ராமசாமி

எழுத்தாளர் ஷோபாசக்தி நடித்த படம் என்பதற்காகச் சொர்க்கவாசல் பார்த்தேன். வன்முறையோடும் குற்றப்பின்னணிகளோடும் கூடிய மனிதர்களின் இடம் சிறை என்ற எண்ணத்தில் எடுக்கப்பட்டுள்ள சொர்க்கவாசலின் நிகழ்வுக் களங்கள் எண்பது சதவீதத்திற்கும் அதிகமாகச் சிறைச்சாலையாகவே இருக்கிறது. சிறைச்சாலைக்கு வெளியே நடக்கும் நிகழ்வுகளும் கூடச் சிறைக்கு உள்ளே நடக்கிறதோ என்ற எண்ணத்தைத் தூண்டுவனவாக இருக்கின்றன. தீவிர சினிமா அல்லது கலைப்படம் என வகைப்படுத்தப்படும் சினிமாக்களில் இதுபோல ஒற்றைக் களத்திலேயே மொத்தக்காட்சிகளையும் விவரிப்பதை அதன் பார்வையாளர்கள் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் வெகுமக்கள் ரசனைக்கான ஒரு சினிமாவின் மொத்த நீளத்திலும் வன்முறையும் குற்றமனமுமே நிறைந்திருக்கும் என்றால் அதன் பார்வையாளர்களின் மனம் தீர்மானமாக விலகிப் போய்விடும். ஏனென்றால் அவர்களின் ரசனை என்பது பலவிதமான உணர்வுகளைத் தூண்டும் காட்சிகளைப் பலவிதமான பின்னணியில் எதிர்பார்க்கக் கூடியது. இதனை சொர்க்கவாசலின் இயக்குநர் புரிந்துகொள்ளவில்லை.



சிறைக்குள் இருக்கும் மூன்று பெருந்தலைகள் இருக்கிறார்கள். அம்மூவர் வரிசையில் மூன்றாவதாக இருப்பவர் சீலன். ஷோபா சக்திக்குத் தரப்பட்டுள்ள அந்தப் பாத்திரம் வன்முறையை விரும்பாத ஒருவராகக் காட்டப்பட்டுள்ளார். அந்தப் பாத்திரம் சிறைக்குள் வந்த காரணம் எதுவும் சொல்லப்படவில்லை. சிலோன்காரர் என்ற தகவல் மட்டுமே உள்ளது. அவருக்கு மட்டுமல்லாமல் மற்ற இரண்டு பெருந்தலைகள் சிகா (செல்வராகவன்) இஸ்மாயில் ஆகியோருக்கும் வெளியுலக வாழ்வுப்பின்னணி விரிவாக இல்லை. சட்டத்துக்குப் புறம்பான குற்றப்பின்னணி கொண்ட தாதாக்கள் என்ற அளவில் தான் குறிப்புகள் உள்ளன. அவர்கள் இருவரும் ஏராளமான வன்முறைச் செயல்களைச் செய்துவிட்டு உள்ளே




வந்திருக்கிறார்கள். உள்ளேயும் தங்களுக்கென அடிதடி கும்பலை உருவாக்கித் தங்கள் பிடியில் வைத்துள்ளார்கள்.

தாதாக்கள் மூவரில் முதலிடத்தில் இருக்கும் சிகா வன்முறையைக் கைவிட்டுவிட்டு சாதாரண மான மனிதர்களைப் போன்றதொரு வாழ்க்கையை நோக்கி நகர நினைக்கிறார். அப்படி நகர்வதற்குக் காரணமாக இருந்த பாத்திரமும் இந்திய மனிதர் அல்ல. கேன்றிக்கா என்ற கறுப்பினப் பாத்திரம்.



வன்முறை வாழ்வு / வன்முறையைக் கைவிடும் மனநிலை என்ற எதிர்வுக்குள் இருக்கும் சிறை மனிதர்களின் முரண்பாட்டையே வளர்த்தெடுத்து நல்லதொரு சினிமாவை உருவாக்கியிருக்க முடியும். அதைச் செய்யாமல் வழக்கமான தமிழ்ச்சினிமாச் சூத்திரமான நல்லவனான நாயகன், கெட்டவர்களோடு மோதி வெல்லும் கதையை எடுக்க நினைத்துக் குழப்பமான காட்சிகளை உருவாக்கியிருக்கிறார் இயக்குநர்.

நாயகப்பாத்திரமான பார்த்தி (ஆர்.ஜே.பாலாஜி)க்கு ஏன் ஜெயிலுக்குள் வருகிறார் என்ற விரிவான தகவல்கள் உள்ளன. உண்மையில் குற்றச் செயல்கள் எதிலும் ஈடுபடாத - தனது நேர்மையான உழைப்பின் வழியாக முன்னேற நினைத்த அவரைக் காவல் துறையில் இருந்தவர்களே குற்றவாளியாகச் சித்திரித்து தண்டனை வாங்கிக் கொடுத்து உள்ளே அனுப்புகிறார்கள். சிறை நிர்வாகத்தின் ஆடுபுலி ஆட்டத்தில் பகடைக்காயாக மாற்றப்படுகிறார். முதல் தாதாவான சிகாவைச் சந்தித்துத் தான் செய்யாத குற்றத்திற்குச் சிறைக்குள் வந்துள்ளேன் என்பதைச் சொல்லி முறையிட நினைக்கும் நாயகனே அந்தத் தாதாவைக் கொன்றவனாகக் கருதப்பட மொத்த நிகழ்வுகளும் அவனைச் சுற்றியே நடக்க ஆரம்பிக்கின்றன.



குறிப்பிட்டநாளில் நடந்த சிறைக் கலவரத்தை விசாரிக்கும் ஆணையஅதிகாரியின் விசாரணையே இந்தத் திரைப்படத்தின் சொல்முறைமை. அதனால் நேர்கோட்டில் நிகழ்வுகள் உருவாக்கப்படவில்லை. சாட்சிகளாக அழைக்கப்படும் சிறைக்காவலர்கள், அதிகாரிகள், வழக்குரைஞர்களென ஒவ்வொருவரும் அவரவர் கோணத்தில் சொல்லும்போது நேர்கோட்டுத்தன்மை சிதைக்கப்பட்டு, துண்டு துண்டான காட்சிகளின் தொகுப்பாக மாறுகிறது.

அரசியல்வாதிகளின் ஆட்டத்திற்கு உயரதிகாரிகள் துணைபோகின்றார்கள் உயரதிகாரிகள் தங்களின் பதவி ஆசையால் விதிகளையும் சட்டங்களையும் மீறுகிறார்கள். அதனால் பாதிக்கப்படும் அப்பாவிகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்பதைச் சொல்ல நினைத்துள்ளார் இயக்குநர். ஆனால் அந்த மையவிவாதம் பார்வையாளர்களுக்குக் கடத்தப்படவில்லை. சிறைக்குள் சமையல் பொறுப்பாளராக இருக்கும்

பாலாஜி சக்திவேல் ஏற்றுள்ள பாத்திரம், தட்டையான பாத்திரமாகவே அறிமுகமாகி அப்படியே முடிக்கப்பட்டுள்ளது. அவரிடம் வெளிப்படும் நல்ல அம்சங்களான காரணங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. 30 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறை வார்டனாக இருக்கும் கருணாஸ் ஏற்றுள்ள பாத்திரத்திற்குள்ளும் அதிகார ஆசை இருந்தது என்பதைத் தூண்டும் காரணிகள் சரியாக உருவாக்கப்படவில்லை. வெளி உலக வாழ்க்கையில் அதிகாரம் செயல்படுவதுபோலவே சிறைக்குள்ளும் அதிகாரம் செயல்படுகிறது என்பதைக் காட்சிகள் வழியாகக் காட்டியுள்ள இயக்குநர், அப்பாவியான நாயகனும் அதனைப் பயன்படுத்திக் கொண்டான் என்பதாகக் காட்டுகிறார். ஆனால் அதற்கான பின்னணிகளும் விவாதங்களும் படத்தில் இல்லை.

கலவரம் நடந்த நாளில் நடந்த உண்மை என்பது என்ன? என்பதைத் தேடும் விசாரணை ஆணையம், உண்மையென்பது சொல்பவர் களின் கோணத்திலிருக்கிறதென்ற தீவிரமான கருத்தியல் நிலையைப் பேசும் விதமாக முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தீவிரத்தை நோக்கிப் படத்தின் காட்சிகள் உருவாக்கப்படவில்லை தொகுக்கப்படவில்லை.

பாத்திரங்களை வேறுபடுத்திக் காட்டுவதில் தவறியுள்ள இயக்குநர், ஒரே மாதிரியான உணர்வுக் கலவையால் படத்தை உருவாக்கியுள்ளார். வெகுமக்களைப் பார்வையாளர்களாக நினைத்து எடுக்கும் வணிகப்படத்தின் சூத்திரத்திற்குள் மென்மையான உணர்வுகளுக்கும் கொந்தளிப்பான மனநிலைக்கும், விலகலான பாத்திரங்களுக்கும் இடமுண்டு என்பதை இயக்குநர் உணரவில்லை. உணர்ந்திருந்தால் நாயகனின் அம்மா, காதலி என்ற பாத்திரங்களை உள்ளடக்கிய காட்சிகளை வலுவாகவும் மெல்லுணர்வுகளோடும் உருவாக்கிப் பாதிக்கப்பட்டவர்களாகக் காட்டியிருக்க முடியும். சமையல் கூடத்தின் பொறுப்பாளராக இருக்கும் பாலாஜி சக்திவேல் பாத்திரத்தோடு நாயகப் பாத்திரத்தின் உரையாடல்கள் வலுவானதாக ஆக்கப்பட்டிருக்கலாம். அவர் அங்கிருக்கும் முதன்மைத் தாதாக்களோடு ஒருவிதமான நல்லுறவைக் கொண்டிருந்தவர் என்று காட்டியிருக்க முடியும். அந்த வாய்ப்புகளையெல்லாம் இயக்குநர் தவறவிட்டுள்ளார்.

நேரடியாகக் கதையோடு தொடர்பு இல்லையென்ற போதிலும், பார்வையாளர்களை விலக்கிக் கொண்டுவந்து ஒரு தளர்வான மனநிலையில் நிறுத்திவைத்துச் சிந்திக்க வாய்ப்பளிக்கும் விதமாகக் காட்சிகள் இடம்பெறவேண்டும். அதை உணர்ந்த இயக்குநர்கள் படத்தின் போக்கில் நேரடியாகத் தொடர்பில்லாத நகைச்சுவைப் பாதையொன்றை உருவாக்கி நகைச்சுவை நடிகர்களை நடிக்கச் செய்கிறார்கள். அந்தத் தனிப்பாதையை ஏதாவது ஒரு காட்சியில் மையக் கதையோட்டத்தோடு இணைக்கிறார்கள்.

சொர்க்கவாசலில் அதுவும் செய்யப்படவில்லை. படத்திற்கு நல்லவிதமான உணர்வுக்கலவைகளை உருவாக்கும் விதமாக இசைக்கோர்வைகளும் அமையவில்லை. பாடல் காட்சிகளும் கவனிக்கத்தக்கதாக இல்லை. வெகுமக்கள் ரசனைக்கான கூறுகளைத் தவறவிட்ட சொர்க்கவாசலில் சில வசனங்கள் சிறப்பாக உள்ளன. ஆனால் அதனை வெவ்வேறு பாத்திரங்கள் வெவ்வேறு சூழலில் பேசுகின்றன. ஆனால் பொருத்தமான சூழலில் இடம்பெறவில்லை. படத்தின் தொடக்கத்தில் கருணாஸ் சொல்லும் முத்திரை வாக்கியம் அவரை முழுவதும் நேர்மையான பாத்திரம்போலவும் கதையை நகர்த்த உதவும் பாத்திரம் போலவும் காட்டுகின்றது. ஆனால் அவரும் ஆட்டவிதிகளைத் தனக்குத் தோதாக மாற்றி விளையாடுபவரென்று ஆகிவிடும் நிலையில் அந்த வாசகங்களின் பொருத்தப்பாடு தவறாகிவிடுகிறது. இதே நிலையில்த்தான் ஷோபா சக்தியின் பாத்திரப்படைப்புமுள்ளது. சிகாவின் மரணத்திற்குப் பின் அவரது தலைமையை சிறைவாசிகள் ஏற்பதற்கான காரணங்கள் வலுவாக இல்லை. அவர் பேசும் வசனங்களும் கோரிக்கைகளும் படத்தில் வளர்த்தெடுக்கப்படாத நிலையில் அவரது பாத்திரமும் அந்தரத்தில் நிற்கும் பாத்திரமாகவே நிற்கிறது. இதுபோலப் பல இடங்களைச் சுட்டிக்காட்ட முடியும். □




1962 அரங்கேறிய இராணுவச் சதி சுதந்திர இலங்கையில் எதிர்பார்க்கப்படாத ஒரு நிகழ்வாகும். சுதந்திரம் அடைந்தது முதல் ஜனநாய விழுமியங்களை இறுகப் பற்றிக் கொண்ட மிகக் குறைவான பிரித்தானிய கொலனிகளில் ஒன்றாக இலங்கை இருந்தது. அவ்வகையில் இலங்கையின் ஜனநாயகம் குறித்த உயர் மதிப்பீடு உலகெங்கும் நிலவியது. இந்நிலையில் 1962ம் ஆண்டு தோல்வியில் முடிந்த இராணுவச் சதியானது, அதன் அரசியற் காரணங்களுக்கு அப்பால் அதன் சமூகப் பரிமாணங்களுக்காக முக்கியத்துவம் பெறுகிறது. குறிப்பாக இச்சதி நடைபெற்று நான்கு ஆண்டுகளின் பின்னர் 1966இல் இதே மாதிரியான இன்னொரு இராணுவச் சதி அரங்கேறியது. இவை அரசுக்கும் முப்படைகளுக்கும் இடையிலான உறவு குறித்த முக்கியமான கேள்விகளை எழுப்புகின்றன.

சுதந்திரமடைந்த 10 ஆண்டுகளுக்குள், இலங்கையின் ஆயுதப் படைகள் சில கடினமான பிரச்சினைகளை எதிர்கொண்டன. இதில் நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளின் அரசியல்மயமாக்கல், தலைமைப் பொறுப்புகளைப் பெறுவதற்கான மத அடையாளம் மற்றும் இனம் பற்றிய கரிசனைகள், சிவில் இடையூறுகளின் போது காவல்துறைக்கு ஆதரவாக ஆயுதமேந்திய சேவைகளைப் பயன்படுத்துவது என்பன அவற்றில் முக்கியமானவை. இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் முதல் தளபதிகள் பிரித்தானிய அதிகாரிகளாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. 1953ஆம் ஆண்டிலேயே, சிவில் இடையூறுகளைக் கையாள்வதற்கு ஆயுதப் படைகள் அழைக்கப்பட்டன. 1953இல் இடதுசாரி சக்திகளால் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் அதை நிறுத்துவதற்கான இராணுவப் பணியில் இன மற்றும் மதப் பிளவுகள் உருவாகியிருக்கவில்லை. 1950களின் முற்பகுதியிலும் நடுப்பகுதியிலும் முப்படைகளின் அதிகாரி நிலைகளில் இன மற்றும் மத அமைப்பில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் அதில் தமிழர்களும் பறங்கியர்களும் அதிகப்படியான பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்தமையாகும். குறிப்பாக மிகச் சிறிய இனத்துவக் குழுவான டச்சு மற்றும் போர்த்துகீசிய பறங்கிய சமூகத்தில் இருந்து பெரும்பான்மையோர் இராணுவ சேவையில் இருந்தனர். 1956க்கு முந்திய காலப்பகுதியில் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேல் இருந்த சிங்கள-பௌத்தர்கள் ஐந்தில் இரண்டு பங்கு ஆயுதப் படை அதிகாரிகளை மட்டுமே கொண்டிருந்தனர். அதே சமயம் சிங்கள கிறிஸ்தவர்கள் மற்றும் தமிழர்கள், அவர்தம் இனக்குழுவின் சனத்தொகை வீதத்தை விட ஆறுமடங்கு அதிகமாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டனர்.

எவ்வாறாயினும், முப்படைகள் ஸ்தாபிக்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகு, சிங்களவர்கள் அதிகாரி தரத்திலும் அதிகமாகப் பிரதிநிதித்துவப்படுத்தத் தொடங்கினர். 1956 மற்றும் 1958ல் வன்முறை வெடித்ததன் மூலம்



இனக்கலவரத்தின் தொடக்கமாக 1956ல் ஏற்பட்ட அரசாங்க மாற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி முக்கிய காரணியாக இருந்தது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா பிரதம மந்திரியாக இருந்த காலம் (1956-59), கடந்த காலங்களைப் போல மூத்த அல்லது நிரூபிக்கப்பட்ட திறன் ஆகியவற்றில் அதிக கவனத்தைப் பெறாத மாற்றங்கள் பல நடந்தன. காவல்துறை மற்றும் ஆயுத சேவைகளில் சமமான தரங்களில் இதே போன்ற மாற்றங்கள் மிகவும் மெதுவாக வந்தன.

1956ஆம் ஆண்டு மே மாதம் கொண்டுவரப்பட்ட மொழிக்கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களை அடுத்து கொழும்பிலும் பிற இடங்களிலும் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் வெடித்தபோது, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா ஆயுதப்படைகளை நம்பியிருக்க வேண்டியிருந்தது. காவல்துறைக்கு ஆதரவாகச் செயல்படும் ஆயுதப் படைகள் மற்றும் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் நிலைமை விரைவாகக் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டாலும், மொழிக் கொள்கையில் மாற்றம் குறித்த விவாதங்கள் மற்றும் பேச்சுவார்த்தைகளின் விளைவாக தொடர்ந்த அரசியல் நெருக்கடி, எந்த செயலிலும் ஈடுபடுவதற்கு இடமளிக்கவில்லை. ஆயுதப் படைகளுக்கான நியமனங்களில் குறுக்கீடு தொடர்ந்தது. மே-ஜூன் 1958 இல், ஆயுதப் படைகள் இந்தக் காலகட்டத்தின் இரண்டாவது இனக் கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்ததால், அவசரகாலச் சட்டங்களின் உதவியோடு ஆயுதப்படைகளைப் பயன்படுத்துவது தொடர்ந்தது. 1961 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருந்த முதல் காலப்பகுதியில் (1960-65) ஆயுதமேந்திய சேவைகள் பயன்படுத்தப்பட்டன.
முதல் முறையாக, நாட்டின் தமிழர் பகுதிகளில், ஒரு சட்ட மறுப்பு இயக்கத்திற்கு எதிராக இராணுவம் பயன்படுத்தப்பட்டது. இதில் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. இதைத் தொடர்ந்து ஆயுதப் படைகள் மற்றும் காவல்துறையின் அதிகாரிகளாக சிங்கள-பௌத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், ஆயுதப் படைகள் மற்றும் காவல்துறையை நடத்துவதில் அவர்களுக்கு அதிக செல்வாக்கைக் கொடுக்கவும் அரசாங்கம் முயன்றதன் எதிர்வினையே 1962இல் அரங்கேறிய முதலாவது இராணுவச் சதியாகும்.

1962 இல் அரங்கேறிய இராணுவச் சதியில் எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுக்கு தொடர்பு இருந்தது பின்னர் பொதுவெளிக்கு வந்தது. குறிப்பாக முன்னாள் பிரதமர்களான டட்லி சேனாநாயக்க, ஜோன் கொத்தலாவல மற்றும் ஆளுனராக இருந்த ஒலிவர் குணதிலக ஆகியோர் இதில் முக்கிய சூத்திரதாரிகளாக இருந்தமை ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

1966ம் ஆண்டு அரங்கேறிய சதி குறித்த தரவுகள் மிகக் குறைவு. அதற்கான காரணங்கள் பல. அவற்றில் சிலவற்றை இங்கு பார்க்கலாம். 1965 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி நான்காவது முறையாக பிரதமராக டட்லி சேனாநாயக்க பதவியேற்றார்.



பதவியேற்ற சில வாரங்களில், அவர் மீண்டும் கடுமையான வயிற்றுவலியால் பாதிக்கப்பட்டார். பதவியை ராஜினாமா செய்ய முடிவு செய்யும் அளவுக்கு வலி அவரை பாதித்தது. டட்லி சேனாநாயக்கவின் உடல்நிலை அவருக்கும் அவரது நெருங்கிய சகாக்களுக்கும் மேலும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. அவர் அடிக்கடி வயிற்றுப் பிரச்சினையினால் அவதியுற்றார். இதனால் பல தடவைகள் அவர் வாரக்கணக்கில் ஓய்வெடுக்க வேண்டியிருந்தது. அவருக்கு மிகவும் நெருக்கமான வைத்திய நிபுணரான லத்திமோரின் ஆலோசனையின்படி அவரை சிகிச்சைக்காக அமெரிக்காவிற்கு அனுப்ப முடிவு எடுக்கப்பட்டது.

இவ்விடத்தில் மருத்துவர் லத்திமோர் தொடர்பான முக்கிய செய்தியொன்றை இங்கு நினைவூட்டுதல் பொருத்தம். 1960 பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது அவர் இலங்கையில் இருந்தார். தேர்தல் பிரச்சாரத்தின் போது மருத்துவர் டட்லி சேனாயக்கவுடன் பயணம் செய்து கிட்டத்தட்ட தினமும் அவருக்கு சிகிச்சை அளித்தார். மார்ச் 1960 தேர்தல் பிரச்சாரத்தின் போது டட்லி சேனாயக்காவின் பரிவாரங்களில் மருத்துவர் லத்திமோர் இருப்பது, அந்தக் காலத்தின் மிகவும் பாதுகாக்கப்பட்ட அரசியல் ரகசியங்களில் ஒன்றாக இருந்தது.

1966 பெப்ரவரியில் டட்லி சேனாயக்கா அமெரிக்காவுக்குப் புறப்பட்டபோது, அது வைத்தியசாலைக்கு நோயாளியாக தனிப்பட்ட விஜயமாக இருந்தது. இருந்தபோதும் வாஷிங்டனில் இருந்தபோது, அவர் முதலில் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளரான டீன் ரஸ்கையும், பின்னர் ஜனாதிபதியான லிண்டன் ஜான்சனையும் சந்தித்தார். மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்கள் அவரது வயிற்றுக் கோளாறு நிச்சயமாக புற்றுநோய் அல்ல என்பதை உறுதிப்படுத்தினர், ஆனால் அது

ஒரு நரம்பு பிரச்சனை காரணமாக ஏற்பட்டது என்றனர். அவர் சிகிச்சை முடிந்து ஓய்வுக்காக லண்டன் புறப்பட்டார். அங்கு பிரித்தானிய மகாராணியுடனான சந்திப்புக்குக்கும் மதிய உணவுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த தினத்தன்று திடீரென்று, அவரது உடல்நிலை மோசமடைந்தது. திடீர் உடல்நலக்குறைவு காரணமாக, ராணியுடன் அவரது சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டது. இத்தகவல் லண்டனில் உள்ள இராஜதந்திர வட்டாரங்களில் தெரியவந்தபோது, லண்டனில் இலங்கையின் பிரதமர் காலமானால், பயன்படுத்துவதற்கு என்று லண்டன் டைம்ஸ் இரங்கல் செய்தியைத் தயாரிக்கத் தொடங்கியது. இரங்கல் செய்திக்கு அவர்கள் டைம்ஸ் ஆ.்.ப் சிலோனை தொடர்பு கொண்டு தகவல் கோரினர். இது இலங்கையில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்தக் காலப்பகுதியில் தீடீரென்று இராணுவத்தில் இருந்த பல படைவீரர்கள் மற்றும் ஆணையிட அதிகாரமற்ற அதிகாரிகள் ஒரு இராணுவச் சதி தொடர்பாக கைது செய்யப்பட்டனர். அந்த நேரத்தில், இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ரிச்சர்ட் உடுகம, பிரித்தானியாவில் இருந்தார், இறுதியாக அவர் நாடு வந்தபோது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். இந்த கைது நடைபெற்ற விதத்தால் 1966 சதியை "கழிவறைச் சதி" (Bathroom coup / Lavatory Coup) என எதிர்கட்சிகள் அழைத்தன.


மேஜர் ஜெனரல் ரிச்சர்ட் உடுகம

கட்டுநாயக்காவில் விமானம் தரையிறங்கிய போது, பெரும் நாடகம் ஏற்பட்டது. ஆயுதமேந்திய காவலர்கள் விமான நிலையத்திலும் அதைச் சுற்றியும் நிலைகளை எடுத்தனர், ராயல் சிலோன் விமானப்படையின் ஹோவர்கிரா.்.ப்ட் பறந்தது. 1966 ஆம் ஆண்டு ஜுலை 7 ஆம் திகதி நாடு திரும்பிய இராணுவத் தளபதி ஜெனரல் உடுகமவை விமானப் படைத்தளபதி ரோஹான் அமரசேகர, சந்தித்து அவரை விமானப்படை அதிகாரிகளின் ஓய்விடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு வந்த பொலிஸ்மா அதிபர் ஜோன் ஆட்டிகல இராணுவத் தளபதி தன்னோடு கழிப்பறைக்கு வரவேண்டும் என்று கோரினார். அவ்வாறு சென்றபோது இராணுவத்தளபதி முழுமையாகச் சோதிக்கப்பட்டார். பின்னர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவை பொலிஸ் மா அதிபர் ஜோன் ஆட்டிகல அவருக்கு வழங்கினார். அப்போது பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் இராணுவத் தளபதியை பணி இடைநீக்கம் செய்யும் உத்தரவை கையளித்தார். அடுத்த நாள் இராணுவச் சதியில் ஈடுபட்டதற்காக அவர் கைது செய்யப்பட்டது என அரசாங்கம் அறிக்கை வெளியிட்டது.

குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் உச்ச நீதிமன்றத்தில் மிகவும் நியாயமான விசாரணை நடந்தது. நீதிபதிகள் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று அறிவிப்பதில் ஒருமனதாக இருந்தது. உடுகம ஆட்சிக் கவிழ்ப்பில் அரசைக் கைப்பற்ற முயன்றதாக அநியாயமாகக் குற்றம் சாட்டப்பட்டார். உடுகமவுக்கு எதிரான வழக்கு விசாரணையின் போது, குற்றப்பத்திரிகையில் உள்ள எந்தவொரு குற்றச்சாட்டின் உண்மை இல்லை என்பது அம்பலப்படுத்தப்பட்டது. பண்டாரநாயக்கவின் உறவினரான உடுகமவின் கீழ் இராணுவம் இருப்பதும், 1960-64 காலப்பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் கீழ் பதவி உயர்வு பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பு அதிகாரிகள் பலர் இராணுவத்தில் பதவிகளை வகித்ததையும் அரசாங்கம் அசௌகரியமாக உணர்ந்தது.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட 31 சந்தேக நபர்களில், ஒரு வினோதமான கலப்பு குழப்பம் ஒரு ஜெனரல், ஒரு ஓய்வுபெற்ற அரசு ஊழியர், ஒரு பிக்கு, ஒரு கேப்டன், 20-க்கும் மேற்பட்ட படைவீரர்கள், கார்ப்ரல்கள் மற்றும் சார்ஜென்ட்கள் மற்றும் சில பொதுமக்கள் உள்ளடங்கி இருந்தனர். இறுதியில் கைதுசெய்யப்பட்டவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று நீதிமன்றம் ஒருமனதாக அறிவித்ததால், குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கின் முக்கிய அம்சம் யாதெனில், இந்த சதி தொடர்பான விசாரணையில் பொலிஸ் தலைமையகத்தின் பிரபலமான 4வது மாடியில் சந்தேக நபர்களின் கொடூரமான சித்திரவதைகளின்

காரணமாக இரண்டு நபர்களின் மரணம் ஏற்பட்டமையாகும். "தொடம்பே முதலாளி" என அறியப்பட்ட வர்த்தகர் ஒருவரும், ஜெனரல் உடுகமவின் பாதுகாப்புக் குழுவில் இருந்த சிப்பாய் திலகவர்த்தன ஆகிய இருவர் பலியாகினர், அவர்கள் புலனாய்வாளர்களால் கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டு உடல் ரீதியாக நான்காவது மாடியில் இருந்து தூக்கி வீசப்பட்டனர். ஆனால் இருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவின் நான்காவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதாக நீதிமன்றில் கூறப்பட்டது. முதற்கட்ட விசாரணையில், நீதிபதி முதலில் தற்கொலை என்றே தீர்ப்பளித்தார். ஆனால் பின்னர் புதிய ஆதாரங்கள் கிடைத்தவுடன் இதை ஒரு கொலை என்று தீர்ப்பை மாற்றினார். குறித்த விசாரணையை நடாத்திய விதம் குறித்து உச்ச நீதிமன்றம் கடுமையாக விமர்சனம் செய்தது.

விசாரணையில் சாட்சியமளித்த சார்ஜன்ட் ஹொண்டாமுனி, தொடம்பே முதலாளியை விசாரணை செய்த போது கொலைச் சத்தம் கேட்டதாகவும், கதவைத் திறந்து பார்த்தபோது தொடம்பே முதலாயளி நிர்வாணமாக தரையில் கிடப்பதைக் கண்டதாகவும் தெரிவித்தார். விசாரணை அதிகாரி, எஸ்பி செனவிரத்ன "அவரை வெளியே தூக்கி எறியுங்கள்" என்று கூறியதைக் கூட அவர் கேட்டதாக அவர் சாட்சியமளித்தார்.

இலங்கையின் வன்முறை வரலாற்றின் முக்கியமான ஒரு தொடக்கப்புள்ளி இந்த விசாரணைகளாகும். 1966 ஜூலையில் பிரதமர் சேனாநாயக்கா நாட்டிற்கு வெளியே இருந்தபோது, இராஜாங்க அமைச்சர் ஜே.ஆர். ஜயவர்தன குற்றப் புலனாய்வின் தலைவராக இருந்த பொலிஸ் அத்தியட்சகர் (Superintendent of Police) அனா செனவிரத்னவை அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொறுப்பை வழங்கினார். இது வழக்கமான நடைமுறையில் இருந்து ஒரு விலகலாகும். குற்றப் புலனாய்வின் செயல்பாடு என்பது புலனாய்வு சேகரிப்பு மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் விசாரணைகள் மூலம் கையாளப்பட்டது. ஆனால் குற்றப் புலனாய்வுப் பிரிவுடனான ஜெயவர்த்தனவின் மோதல்கள் மற்றும் அதன் மீதான அவரது விரோதம் ஆகியவை நன்கு அறியப்பட்டவை.

குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் மீது சித்திரவதையைப் பிரயோகிக்க அனா செனவிரத்ன, பெலியத்த பொலிஸ் அதிகாரியாக இருந்த இன்ஸ்பெக்டர் ராகுல சில்வாவை பயன்படுத்தினார். ராகுல சில்வா, தனது மேலதிகாரிகளுக்கு தெரிவிக்காமல் அனா செனவிரத்னவின் கட்டளைகளை நிறைவேற்றினார். ராகுல சில்வா சித்திரவதை மூலம் ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொடுக்கும் வேலையைச் செய்தார். இது தொடர்பில் மக்களும் ஊடகங்களும் புகார் அளித்தும் அவர் மீது உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது அவருக்கு ஊக்கமளித்தது. அவர் மீதான குற்றச்சாட்டுகளில் பாலியல் பலாத்காரம் கூட அடங்கும்.

இரண்டு மரணங்களின் விளைவால் விசாரணையில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக கொலைக்கான ஒரு தனியார் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தமையானது அனா செனவிரத்னவுக்கு சாதகமாக மாறியது. ஆனாலும் அது அவரை ஒரு அரசியல் கைக்கூலி போல் ஆக்கியது. பொலிஸ் அதிகாரிகளிடத்து நற்பெயர் அற்ற ஒருவராக அவர் இருந்தார். இருந்தபோதும், ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தனது நேர்மையின் காரணமாக மிகவும் பிரபலமாகவும் அதேவேளை பணிக்கால மூப்பின் அடிப்படையில் முன்னிலையில் இருந்த துணை பொலிஸ்மா அதிபர், ருத்ர ராஜசிங்கத்தை புறக்கணித்து அனா செனவிரத்னர பொலிஸ்மா அதிபராக நியமித்தார்.

இரண்டு கொலைகள் தொடர்பான வழக்கானது, குற்றவியல் நீதிச் செயல்முறையை அரசியல் இயந்திரம் அப்பட்டமான அலட்சியம் செய்த முதலாவது சந்தர்ப்பமாகும். அந்த ஆரம்பம் பிற்கால வரலாற்றில், தற்போதுவரை, உரிய நீதிச் செயல்முறையில் இதேபோன்ற அரசியல் குறுக்கீட்டிற்கு வழி வகுக்கிறது. ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால், இன்று இத்தகைய தலையீடுகள் துணிச்சலாகவும் திமிர்த்தனமாகவும் இருக்கிறது. விதிவிலக்கு இல்லாமல் ஒட்டுமொத்த குற்றவியல் நீதி இயந்திரமும் சேற்றில் புதையுண்டுள்ளது. நீதிக்குப் பதிலாக, இத்தகைய செயல்முறை மாற்றமானது பதவி உயர்வுகளையும் பல கவர்ச்சிச் சலுகைகளையும் தருகிறது. இந்நிலையில், சரியான செயல்முறை எனப்படும் அமைப்பு எவ்வாறு உயிர்வாழ முடியும்? ஏனெனில், முறையான செயல்முறையை விட, முறையற்ற செயல்பாட்டின் மூலம் கிடைக்கும் வருமானம் அவர்களுக்குச் சிறந்தது. அவ்வகையில் 1966 சதி ஒரு முக்கிய தொடக்கமாகும்.

1966 சதி தொடர்பான மூன்று செய்திகள் முக்கியமானவை. முதலாவது, சதித்திட்டம் தொடர்பான பொலிஸ் விசாரணைகளின் போது, டாக்டர் விக்கிரமசிங்க என்றும் அழைக்கப்படும் டாக்டர் திஸ்ஸ ஒருவரின் பெயர் வெளிவரத் தொடங்கியது. அவர், யார் என்று பின்னர் அறியப்பட்டது. டொன் படபெந்திகே நந்தசிறி விஜேவீர, பின்னர் ரோஹன

விஜேவீர என அழைக்கப்பட்டார். அந்த நேரத்தில் அவர் மாஸ்கோவில் உள்ள லுமும்பா நட்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறி, இலங்கை திரும்பியிருந்தார்.
ஆனால் அவர் கைது செய்யப்படவுமில்லை, விசாரிக்கப்படவுமில்லை. இது குறித்தும் அதிகம் பேசப்படுவதில்லை.
இரண்டாவது, குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முக்கியமான இன்னொரு நபர், ஹென்பிடகெதர ஞானசீக தேரர். இவர் இரத்தினபுரி சிறி சுமன பிரிவேனாவை நிறுவியதோடு நாடறிந்த ஒருவராவர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உருவான காலம்முதல் அதனோடு பயணித்தவர்.



Henpitagedara Gnanaseeha Thera



இன்றுவரை இந்த சதிக்கும் இவருக்குமான தொடர்பு குறித்து பொதுவெளியில் தகவல்கள் இல்லை.
இவர் சிறையில் இருந்த காலப்பகுதியில் எழுதிய ஒரு புத்தகம் மிகப் பிரபலமானது. அதில் அவர் இலங்கையில் ஒரு கருணையுள்ள ஆட்சியாளரின் கீழ் ஒரு சர்வாதிகாரத்தை நிறுவ வேண்டும் என்று பரிந்துரைத்தார். செழிப்பை வழங்குவதும், நாடு அதன் பழைய பெருமைகளை மீட்டெடுப்பதும் இதன்மூலம் சாத்தியம் என்று அவர் வாதிட்டார். இந்நூல் இன்றும் அரசியல்வாதிகளின் விருப்புக்குரிய ஒன்றாகும், ஏனென்றால் எதிர்காலத்தில் எப்போதாவது ஒரு சர்வாதிகார ஆட்சியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அவர்கள் தேர்வுசெய்தால், அதற்கான தார்மீக மற்றும் நெறிமுறை நியாயத்தை இப்புத்தகம் வழங்குகிறது.

மூன்றாவது, குறித்த வழக்கில் அரசு தரப்பு ஆலோசகராக (Crown Counsel) பணியாற்றிய வேக்லி பால் (Wakeley Paul), இவ்வழக்கு குறித்தும் குறித்த சதி தொடர்பிலும் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார்:

> “சதித்திட்டம் தீட்டுபவர்களின் அடிப்படைக் கருப்பொருளானது, இராணுவத்தை சிங்கள சார்பு ஸ்தாபனமாக ஆக்க வேண்டும் என்பதுதான். இந்த முனைப்பால் பணியிலிருந்த தமிழ் அதிகாரிகள் கோபமடைந்தனர். இந்த கூறுகளால் பீதியடைந்தனர். அத்தகைய ஒரு அதிகாரியான கேப்டன் விக்னராஜா, இந்த மோசமான சதிகாரர்களின் நடவடிக்கைகளை கோடிட்டுக் காட்டி பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்தார். ஆனால் பின்பு நீதவான் திரு டேவிட் முன் நடந்த ஆரம்ப விசாரணையில் சாட்சியமளிக்க மறுத்துவிட்டார். இனத்துவம் அரசியல் பழிவாங்கல் ஆகிய இரண்டினதும் கலந்த கலவையாக இந்த வழக்கு இருக்கிறது.”

வேக்லி பாலின் இக்கருத்துக்கள் இந்த சதி தொடர்பான இன்னொரு பரிமாணத்தை வழங்குகின்றன. ஆனால் இதை முழுமையாகப் புரிந்து கொள்ள இயலாதபடி இலங்கையின் வரலாற்று பக்கங்கள் நிரம்பியிருக்கின்றன.

ஏப்ரல் 1966 இல் சிங்கள தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு முன்னதாக, ஜே ஆர் ஜெயவர்த்தன, இரத்மலானை கண்டாவளையில் உள்ள ஜோன் கொத்தலாவலவின் இல்லத்திற்குச் சென்றார். அங்கு அவருக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

தொடரும்□




**“நாடகக் கீர்த்த” உயர் விருதினைப் பெற்றார் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோ. ஜோண்சன் ராஜ்குமார் (காவலூர் யோவான்)**




புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கைக் கலைக்கழகம் மற்றும் அரச நாடக ஆலோசனைக்குழு ஆகியவற்றின் ஒன்றிணைந்த ஏற்பாட்டில் 23.12.2024 அன்று மாலை கொழும்பு “தாமரைத் தடாக கலையரங்கில்” இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான “அரச நாடக விழா” விருது வழங்கும் நிகழ்வில், அரச உயர் விருதுகளில் ஒன்றான “நாடகக் கீர்த்தி” விருதினை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் அவர்கள் பெற்றுக் கொண்டார். இவ்விருதினை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி வழங்கி வைத்தார்.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் இவ்விருதினை பெற்றுக்கொண்ட ஒரே ஒரு தமிழ்க் கலைஞர் இவராவார். ஏனைய இருவரும் சகோதர மொழிக் கலைஞர்கள் ஆவர். இவ் உயர் விருது கடந்த 2020ஆம் ஆண்டு திருமறைக் கலா மன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் நீ.மரிய சேவியர் அடிகளாருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Christian Selmar Emil






**Ella (4 år).**
*Tegnet en store søster og en lillesøster etter at hun har lekt med kusinen hennes.*

**4வயது எல்லா வரைந்த ஓவியம்.**
*தனது சகோதரியுடன் விளையாடி விட்டு, தனது அக்காவையும், சிறிய தங்கையையும் வரைந்துள்ளார்.*

Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com
Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440
(Print ISSN: 2703-8785)
VIPS: 729129 - Konto: 3626 31 78585